**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி</u>**

**அசல் வழக்கு எண்.** 6/2022

**வாக்குமூலம்**.வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | காத்தாயி | தொழில் | |
| க/பெ. | முருகன் | வயது | 47 / 2025 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

1873–ம் வருடத்து 10–ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 04.07.2025ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**<u>1,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. தாவா சொத்து வன்னியப்பிள்ளை வயல் கிராமத்தில் இருக்கிறது. தாவா சொத்தின் புலஎண்கள் 138/3 மற்றும் 140/1 ஆகும். தாவா வழக்கை நான் பாகப்பிரிவினை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்து இருக்கிறேன். நான் யாரை எதிர்த்து வழக்கு தாக்கல் செய்து இருக்கிறேன் என்றால் எனது தகப்பனாரை எதிர்த்து தாக்கல் செய்து இருக்கிறேன். தாவா 2,3 பிரதிவாதிகள் எனது தம்பிகள் 4,5 பிரதிவாதிகள் எனது அக்கா மகன் மற்றும் மகள் ஆவார்கள். எனது தகப்பனாருக்கு 80 க்கு மேல் ஆவதால் அவர் மூத்தக்குடிமகன் என்றால் சரிதான். என் தகப்பனார் தற்போதும் காய்கறி வியாபாரம் செய்து பிழைப்பு நடத்திவருகிறார் என்றால் சரியல்ல. வீட்டில் தேங்காய் வியாபாரம் செய்து வருகிறார். வழக்கு சொத்துக்கள் மனைக்கட்டுத்தான்.

2. வழக்கு சொத்தின் ஒரு பகுதியின் என் தந்தை வீடுக்கட்டியும் கோவில் கட்டியும் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான் சாட்சி தற்போது பொதுவான வீடு தான் என்று கூறுகிறார். எனக்கு 2000ஆம் ஆண்டு திருமணம் ஆனது. நான் வெட்டிவயல் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். எனது தாயார் இறந்து 30 வருடங்களுக்கு மேல் ஆகிறது என்றால் சரிதான். 30 வருடங்களாக பாகப்பிரிவினைக்கு நடவடிக்கை எடுக்காமல் தற்போது வழக்கு தாக்கல் செய்வதற்கு குறிப்பிட்ட காரணம் இல்லை என்றால் சமீபகாலம் வரை எனக்கு தாவா சொத்தில் இருந்து பலன்கள் கொடுத்து கொண்டு இருந்தார்கள் தற்போது தம்பியை வீட்டை விட்டு அனுப்பி விட்டதால் தம்பி தனியாக பாகம் கேட்டு இருக்கிறார் அதனால் நானும் பாகம் கேட்டு வழக்குப்போட்டு இருக்கிறேன் எனது தம்பியும் தாவா சொத்தில் தான் பாகம் கேட்டு இருக்கிறார் என்றால் ஆமாம்.

3. தாவா சொத்தைப்பொறுத்து எனது தம்பி தனிபாகம் வழக்கு நான் தனிபாக வழக்கு தாக்கல் செய்யமுடியாது என்றாலும் நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் தான் பாகவழக்கு தாக்கல் செய்து இருக்கிறேன். எனது தாயார் இறப்பதற்கு முன்பு உடல்நிலை பாதிக்கப்பட்டு இருந்தார் என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு 2வது திருமணம் ஆகிவிட்டது என்றால் சரியல்ல. என் தகப்பனாருக்கு 2வது திருமணம் ஆகிவிட்டது என்றாலும் அதை மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் தகப்பனாருக்கு 2வது திருமணம் ஆகி 30 வருடங்களுக்கு மேல் ஆகிறது என்றால் சரியல்ல. என் தகப்பனார் 2வது மனைவி தற்போது நோய்வாய்ப்பட்டு அவரை என் தகப்பனார் பராமரித்து வருகிறார் என்றால் சரியல்ல. திருமணம் ஆகவில்லை. நான் தாவா சொத்து உள்ள கிராமத்தில் வசித்து வரவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து உள்ள கிராமம் நான் பிறந்த இடம் ஆகும்.

4. என் தகப்பனார் கடன் வாங்கியது பொறுத்து முத்தையா என்பவரிடம் நான் பேச்சு வார்தை நடத்தவில்லை என்றால் சரிதான். எங்களிடம் அவர்கள் எதுவும் கேட்டுக்கொள்ளவில்லை. முத்தையாவின் கடனை அடைக்க நான் முன் வரவில்லை என்றால் சரியல்ல. எனக்கு அந்த கடன் விபரம் தெரியாது. என் தகப்பனாரின் கடனை அடைக்க முன்வராததாலும் என் தகப்பனாரை பராமரிக்காததாலும் வழக்கு சொத்தை பொதுக்குடும்ப சொத்தாக பாவித்து பாகம் கோரமுடியாது என்றால் சரியல்ல. நான் வேறு கிராமத்தில் வசித்து வருவதாலும் தாவா சொத்து வேறு கிராமத்தில் இருப்பதால் நான் கூட்டு அனுபவத்தில் இருப்பதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. எனது திருமணத்தின்போது எனக்கு சீர்வரிசைகள் செய்து திருமணம் செய்து வைத்ததால் தான் 30 ஆண்டுகளாக பாகம் கோரவில்லை என்றால் சரியல்ல சீர்வரிசை எதுவும் செய்யவில்லை. 30 ஆண்டுகளாக பாகம்கோராமல் வழக்கு சொத்தின் தற்போதைய மதிப்பு கூடியிருப்பதால் தற்போது வழக்கு தாக்கல் செய்துயிருக்கிறேன் என்றால் சரியல்ல. எங்களை வரவிடாமல் தடுப்பதாலும் எனது தம்பியை வீட்டை விட்டு அனுப்பி விட்டதால் வழக்கு தாக்கல் செய்து இருக்கிறேன்.

5. தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. எனது தாயார் கூலி வேலை செய்து வாங்கிய சொத்து ஆகும். தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்பதால் தான் 1ம் பிரதிவாதி 2ம் திருமணம் செய்தும்போதும் கூட நான் வழக்கு சொத்தில் பாகம்கோரவில்லை என்றால் சரியல்ல. 2ம் திருமணம் செய்யவில்லை. சாட்சி தனிச்சையாக அந்த அம்மாவின் பிள்ளைகள் விரட்டிவிட்டதால் எங்கள் வீட்டில் வந்து இருக்கிறார் என்று கூறுகிறார். தாவா சொத்தை 1ம் பிரதிவாதி தகப்பனார் 1ம் பிரதிவாதியின் சகோதரிக்கு கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து 1ம் பிரதிவாதி தனது சுயசம்பாத்தியத்தில் தனது சகோதரியிடம் இருந்து கிரையம் வாங்கியது என்றால் சரியல்ல. எனது அம்மா கிரையம் வாங்கிய சொத்து ஆகும். பத்திரம் 1ம்

பிரதிவாதி பெயரில் செய்யப்பட்டது. வழக்கு சொத்து பொதுக்குடும்ப சொத்து இல்லை என்றால் சரியல்ல.

6. நானும் எனது சகோதரர்களும் வழக்கு சொத்தில் பாகம் கோரமுடியாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்பதால் தான் மற்ற பிரதிவாதிகள் வழக்கு நடத்தவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு பொய்யானது என்றாலும் வழக்கு சொத்தின் சந்தை மதிப்பு அதிகரித்தால் வழக்கு தாக்கல் செய்து இருக்கிறேன் என்றால் சரியல்ல.

**6ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**